# ஐயமும் தெளிவும்

***ஐயம் :*** சுவனத்தில் அண்ணலாருடன் இருக்க விரும்பிய தோழரை நோக்கி **'அதிகமாகத் தொழுது வருவீராக!'** என்று நபி(ஸல்) அவர்கள் கூறியது எந்தத் தொழுகையை?

*மீரான், பாளையம்*

***தெளிவு :*** நபி(ஸல்) அவர்கள் 'நஃபிலான' தொழுகைகளைத்தான் குறிப்பிட்டார்கள். அதற்கென்று குறிப்பிட்ட எண்ணிக்கை எதுவும் கிடையாது. நம் மனம் விரும்பும் போது, நமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இயன்ற அளவு தொழலாம்.

> **"நான் என் அடியான்மீது கடமையாக்கிய வணக்கங்களைவிட விருப்பமாந எதன் மூலமும் ஒரு அடியான் என் நெருக்கத்தைப் பெற முடியாது. (இப்படிக் கடமைகளை நிறைவு செய்தபின்) நஃபிலான வணக்கங்கள் மூலம் என் அடியான் என்னை (மேலம்) நெருங்கிக் கொண்டே இருக்கிறான் ...."** என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறிப்பிடுகின்றார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல் : புகாரீ*

> ஒரு நபிதோழர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாம் என்றால் என்னவென்று கேட்டபோது, **'ஒரு நாளில் ஐந்து நேரம் தொழுவது' என்று பதில் கூறினார்கள். அதற்கு அவர் "வேறு எதுவும் என்மீது உண்டா?" என்று கேட்க "நீயாக விரும்பிச் செய்தாலே தவிர வேறு எதுவுமில்லை"** என்று பதில் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : தல்ஹா(ரழி), நூல் : புகாரீ*

இந்த நபிமொழிகளிலிருந்து உபரியான வணக்கங்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது என்று தெரிகின்றோம்.

இந்த இடத்தில் நீங்கள் கேட்காவிட்டாலும் ஒரு விளக்கத்தை நாம் சொல்ல வேண்டியுள்ளது. **'நஃபிலான வணக்கங்கள்'** என்பதற்கு பல விதிகள் உண்டு.

1. முதலில் அது வணக்கமாக அல்லாஹ்வோ, அவனது தூதரோ சொல்லித்தந்த ஒன்றாக இருக்கவேண்டும்.

உதாரணமாக, நான் நஃபிலான வணக்கம் புரிகிறேன் என்று சொல்லிக்கொண்டு **'ஹக்தூஹக்'** என்று அல்லாஹ்வை திக்ரு செய்ய முடியாது. காரணம் இப்படி ஒரு திக்ரை அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்குச் சொல்லித்தரவில்லை **"நம்முடைய உத்தரவு இல்லாத ஒரு அமலை எவரேனும் செய்தால் அது நிராகரிக்கப்படும்"** என்பது நபிமொழி.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி),*

*நூல்கள் : முஸ்லிம், அபூதாவூது, அஹமது*

2. அல்லாஹ்வும், அவனது தூதரும் இவ்வளவு என நிர்ணயித்துச் சென்றவற்றில் எதையும் அதிகமாக்கக்கூடாது.

உதாரணமாக லுஹருக்கு **'நான்கு ரகாஅத்துகள்'** என்பது அல்லாஹ்வின் தூதரால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. **"நான் விரும்பினால் அதிகமாக்கலாம்"** என்று நபி(ஸல்) அவர்கள் அனுமதி தந்துவிட்டார்கள் என்று கருத்திக்கொண்டு லுஹரை ஆறு ரகாஅத்துக்களாகத் தொழ முடியாது. வேண்டுமானால் லுஹர் தொழுகையை முடித்து விட்டு நம்முடைய வசதிபோல் எவ்வளவு வேண்டுமானாலும் தொழலாம்.

இன்றொரு உதாரணத்தையும் இங்கே குறிப்பிடலாம். **'தராவீஹ்'** எட்டு ரகாஅத்துகள் என்பது நபி(ஸல்) அவர்கள் செயல் மூலம் நிர்ணயித்த ஒன்று. எனவே அந்தப் பெயரில் அவ்வளவுதான் தொழவேண்டும். அதை முடித்த பிறகு அவரவர் வசதிக்கேற்ப எவ்வளவு வேண்டுமானாலும் நஃபிலாகத் தொழலாம்.

3. இவ்வாறு நஃபிலான வணக்கங்கள் மற்றக்கடமைகளுக்கு குறுக்கே நிற்கக்கூடாது.

**'நான் தொழப்போகிறேன்'** என்று சொல்லிக் கொண்டு மனைவி மக்கள், பக்கத்து வீட்டுக் காரர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை மறந்து விட்டு நஃபிலில் மூழ்கக் கூடாது.

அவ்வாறு ஒருவர் செய்து கொண்டிருந்ததைப் பற்றி அவரது மனைவி நபி(ஸல்) அவர்களிடம் முறையிட்ட போது, அவரை நபி(ஸல்) அவர்கள் கண்டித்துள்ளனர். **உன் கண்களுக்கும் உன் மனைவிக்கும் செய்யவேண்டிய கடமைகள் உண்டு** என்று உணர்த்தினார்கள்.

*அறிவிப்பவர் : அம்ருப்னுல் ஆஸ்(ரழி),*

*நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அஹமது, நஸயீ*

4. தான் செய்கின்ற **நஃபிலான** வணக்கத்தை அடுத்தவர்மீது திணிக்கக்கூடாது.

எனக்கு இன்று 12 ரகாஅத்துகள் நஃபில் தொழ வாய்ப்பு உண்டு விருப்பம் உண்டு என்றால் நான் தொழலாம். நான் 12 தொழுவதால் நீங்களும் 12 தொழுங்கள், என்று எவரிடமும் நாம் கூறமுடியாது. காரணம் இரண்டாவதாக நாம் குறிப்பிட்ட நபிமொழியில் **"நீ விரும்பினால் தவிர வேறு இல்லை"** என்று குறிப்பிடுகிறார்கள். நஃபிலான வணக்கம் தனி நபர்கலின் விருப்பத்தின்பாற்பட்டது.

எனக்கு ஒரு நாள் 20 ரகாஅத்துகள் தொழ விருப்பமும், வசதியும் உண்டு என்றால் நான் அப்படித் தொழலாம். அடுத்த நாள் 24 ரகாஅத் தொழ வசதி என்றால் அப்படிச் செய்யலாம். ஒட்டு மொத்தமாக அனைவரின்மீதும் ஒரு குறிப்பிட்ட அமலை நாம் விதியாக்க முடியாது. அந்த அதிகாரம் நமக்கு

இல்லை. சுருங்கச் சொல்வதென்றால் குர்ஆனுக்கும், நபி(ஸல்) அவர்களின் மற்ற போதனைகளுக்கும் முரண்படாத வகையில் நஃபிலான வணக்கங்களில் ஈடுபடலாம்.

அந்நஜாத்